## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS.No. 209/2018 C/W OS.No. 210/2018 C/W OS.No. 262/2016

நாள் 01.09.2025

PW3 – கார்த்திகேயன்

த/பெ – லேட்.பழனிச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of September 2025)**

**குறுக்கு விசாரணை**

1. மூன்று அசல் வழக்குகளிலும் எனது தாயார் சுந்தராம்பாள் 2-ம் வாதி என்றால் சரிதான். எனக்கு தற்போது 35 வயதாகிறது. எனது அப்பா பழனிச்சாமி நான் 1 வயதாக இருக்கும் போதே இறந்து போய்விட்டார். நான் கம்பெனியில் கூலி வேலைக்கு சென்று வருகிறேன். நான் 20 வருடமாக கூலி வேலை செய்து வருகிறேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. எனது தாயார் சுந்தராம்பாள் தாக்கல் செய்த வழக்குகளுக்காக தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்குகளின் 1-ம் வாதி ருக்குமணி எனது பெரியம்மா ஆவார். நான் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்துக்கள் எனது தாத்தா சென்னிமலை கவுண்டருக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் தாவா சொத்துக்களின் பேரில் அவிநாசி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் எப்போது அடமானம் வைத்து கடன் பெற்றார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. அவர் வாங்கிய கடனை திருப்பி செலுத்துமாறு எங்களது குடும்பத்தாரிடம் ஏதேனும் வேண்டுகோள் வைத்தாரா? என்றால் எனது தாயார் சுந்தராம்பாளிடம் சொல்லியிருந்தார், அந்த விபரம் எனக்கு தெரியும். அது எந்த தேதி என்று

எனக்கு ஞாபகமில்லை, அப்போது எனக்கு சுமார் 20 வயது இருந்திருக்கும். எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் கடந்த 26.08.2024–ம் தேதியில் இறந்து போனார். எனது தாத்தா சொத்தின் பேரில் கடன் வாங்கிய விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது தாயார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக அந்த கடன் பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் கடந்த 03.04.2006–ம் தேதியில் வாதிகளுக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்த விபரம் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் எனது அம்மா சுந்தராம்பாள் சொல்லி தான் தெரியும். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும் போது எனக்கு சுமார் 15 வயது இருந்திருக்கும் என்றால் சரிதான், என்ன காரணத்திற்காக வேண்டி எனது தாத்தா வாதிகள் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதினார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், வாதிகள் எனது தாத்தா பெற்ற கடனை திருப்பி செலுத்தி அடைத்து விட்டதால் செட்டில்மெண்ட் ஆவணத்தை அவர்கள் பெயரில் எழுதி வைத்துள்ளார். தாவா சொத்துக்களுக்கு உண்டான பட்டா, சிட்டா போன்ற வருவாய் ஆவணங்கள் 8–ம் பிரதிவாதி லோகநாதன் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

3. எனது மாமா பெயர் எஸ்.நடராஜ் ஆகும். அந்த நடராஜ் அ.வ.எண்.209/2018, அ.வ.எண்.210/2018 என்ற இரண்டு வழக்குகளிலும் 2–ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் சரிதான். எனது மாமா நடராஜ் மற்றும் எனது தாத்தா சென்னிமலை கவுண்டரும் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா சென்னிமலை

கவுண்டருக்கு வயோதிகத்தினால் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்ததால் தான் எனது மாமா நடராஜ் துணையோடு இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி விபரங்களை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 6–ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மாமா நடராஜ் மற்றும் எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் ஆகிய இருவரும் சேர்ந்து தாவா சொத்தை வேறு 3–ம் நபருக்கு விற்பனை செய்ய போவதாக எனது தாயார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆரம்பத்திலிருந்தே எனது மாமா நடராஜீக்கும், எங்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல. எனது தாயாருக்கும், எனது மாமா நடராஜீக்கும் இடையே பிரச்சனை எதுவும் வரவில்லையா? என்றால் பிரச்சனை இருந்து வந்தது. வாதிகள் பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் ரத்து செய்து விட்ட விபரத்தை எனது தாயார் சுந்தராம்பாள் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 7–ல் 10, 11–வரிகளில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வீதம் செட்டில்மெண்ட் ஆவணத்தை தெரியாமல் ரத்து செய்து விட்டதால் தான் அந்த செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் செல்லாது என்று வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரிதான். இந்தவழக்குகளில் கண்ட 3–ம் பிரதிவாதிகளான நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகிய இருவரையும் நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். எனது மாமா நடராஜ் உயிரோடு இருக்கும் காலத்தில் எனது மாமாவும், நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர் சேர்ந்து தாவா சொத்தை விற்பனை செய்ய முயற்சித்ததாக சொல்லப்படும் விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த விபரத்தை

எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தாயார் சுந்தராம்பாள் சொன்னதின் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நல்லி சண்முகசுந்தரம் என்பவருக்கு எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் ஒரு அக்ரிமெண்ட் எழுதி கொடுத்திருந்த விபரம் எனக்கு தெரியுமா? என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால், எனது பிரமாண வாக்குமூலத்தில் அக்ரிமெண்ட் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அந்த அக்ரிமெண்ட் பற்றிய விபரம் எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் இந்த வழக்குகளை தாக்கல் செய்வதற்கு 2,3 மாதங்களுக்கு முன்பாக எனக்கு தெரிய வந்தது. நிலத்தரகர்கள் வந்து எனது அம்மா சுந்தராம்பாளிடம் சொல்லி அதன்பேரில் எனது அம்மா என்னிடம் சொன்னதின் பேரில் எனக்கு தெரியும். எனது மாமா நடராஜ் மற்றும் எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் ஆகிய இருவரும் சேர்ந்து நல்லி சண்முகசுந்தரம் என்பவருக்கு கடந்த 24.03.2006–ம் தேதியில் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் 8–வது பாராவில் 5–வது பக்கத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தின் பேரில் நல்லி சண்முகசுந்தரம் தாவா சொத்தை பொறுத்து திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.344/2008 என்ற வழக்கை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதிகள் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். அந்த அ.வ.எண்.344/2008 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செல்லாது என்று வாதிகளான நாங்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்தின் ஒரு பகுதி சொத்தை பொறுத்து எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் 29.03.2006–ம் தேதியில் ஒரு கிரைய ஒப்பந்த பத்திரத்தை விஸ்வலிங்கசாமி என்பவருக்கு எழுதி கொடுத்திருந்தார் என்றால் சரிதான், அந்த விபரம் பின்னிட்டு தான் எனக்கு தெரிய வந்தது. அந்த கிரைய ஒப்பந்தத்தின் பேரில் அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விஸ்வலிங்கசாமி அ.வ.எண்.266/2008 என்ற ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரிய வழக்கை எனது தாத்தா சென்னிமலை கவுண்டருக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் விஸ்வலிங்கசாமிக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டுள்ள விபரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 9–ல் 8,9 வரிகளில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த அ.வ.எண்.266/2008 வழக்கு பற்றிய விபரம் தெரிந்த பிறகும் இந்த வழக்கின் வாதிகளை அதில் கட்சி சேர்க்க வேண்டும் என்று எங்கள் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது பற்றிய விபரம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 10–ல் எனது தாத்தா சென்னிமலை கவுண்டரும், எனது மாமா நடராஜீவும், நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர்கள் சேர்ந்து சொத்தை பல நபர்களுக்கு விலை பேசி விற்பனை செய்ய முயற்சித்த எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி விபரங்களை தெரிந்து கொள்ள வேண்டி யார் வில்லங்க சான்று எடுத்து பார்த்தார்கள் என்றால் நான் தான் வில்லங்க சான்று எடுத்து பார்த்தேன். எந்த தேதியில் வில்லங்க சான்று எடுத்து பார்த்தேன் என்று எனக்கு

ஞாபகமில்லை. நான் அந்த வில்லங்க சான்றை 03.12.2010–ம் தேதியில் எடுத்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால், நல்லி சண்முகசுந்தரம் மற்றும் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவரும் சேர்ந்து 8–ம் பிரதிவாதி லோகநாதன் பெயருக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என்று இந்த வழக்குகளை 12.12.2014–ம் தேதியில் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் சொத்தை அபகரிக்க வேண்டி தான் வில்லங்க சான்று எடுத்து பார்த்து விட்டு காலம் தாழ்த்தி பொய்யாக இந்த வழக்குளை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

5. எனது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம். 7–ல் 1 முதல் 4 வரிகளில் வாதிகள் பெண்கள் என்பதாலும், 1–ம் வாதி வெளியூரில் வசித்து வருவதாலும் அவர்களால் எப்போதும் வழக்கு சொத்தில் இருக்க முடிவதில்லை என்றும், அதை சாதகமாக பயன்படுத்தி பிரதிவாதிகள் வழக்கு சொத்தை 3–ம் நபர்களுக்கு விற்க முயற்சி செய்கிறார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் சுந்தராம்பாள் என்ன பரிகாரங்கள் கோரி இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆவணங்கள் செல்லாது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதை தவிர வேறு பரிகாரம் ஏதேனும் கேட்கப்பட்டுள்ளதா? என்றால் வேறு பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 12–ல் எனது தாத்தா 1–ம் பிரதிவாதி, எனது மாமா 2–ம் பிரதிவாதி மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து 8–ம் பிரதிவாதி லோகநாதனுக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை 8–ம் பிரதிவாதி லோகநாதன் தான் சட்டப்படி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

அதனால், தாவா சொத்தை எனது தாயார் சுந்தராம்பாள் எனது பெரியம்மா ருக்குமணி ஆகியோர் விற்பனை செய்ய எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரிதான். நல்லி சண்முகசுந்தரத்திற்கும், விஸ்வலிங்கசாமிக்கும் எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தது உண்மை என்பதால் தான் எனது தாத்தா உடனிருந்து சொத்தை 8–ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த விபரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 10–ல் 4 முதல் 7 வரிகளில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.8 தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில் 2–வது பக்கத்தில் என்னையும், எனது மனைவியையும் எனது பெண் மக்களான ருக்குமணி, சுந்தராம்பாள், கமலம் ஆகியவர்கள் எங்களது ஆயுள் வரை வைத்து போஜித்து பேணுவார்கள் என்ற நம்பிக்கை இல்லாததால் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்வதாக எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது தாத்தா எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது தாத்தாவே சட்டப்படி முறையாக காரணம் சொல்லி ரத்து செய்து விட்டதால் எனது தாத்தா நல்லி சண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோருக்கு எழுதிகொடுத்த கிரைய ஒப்பந்தங்கள் அதன் பேரில் நீதிமன்றம் மூலம் ஏற்பட்ட கிரைய ஆவணம் உண்மை என்று நிரூபணமாகிறது என்றால் சரியல்ல. அதனால், எனது தாயாரும், எனது பெரியம்மாவும் சேர்ந்து அவ.எண்.69/2011 என்ற வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பெற்றுள்ள இடைக்கால தடையுத்தரவு 8–ம் பிரதிவாதி லோகநாதனை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த இடைக்கால உத்தரவு யாருக்கெதிராக பெறப்பட்டதோ

அந்த நபர்களான 1 முதல் 3 பிரதிவாதிகள் இறந்து போய்விட்டார்கள் என்றால் சரிதான். அதனால்தான், நாங்கள் பொய்யான ஆவணங்களை தயார் செய்து இந்த பொய் வழக்குகளை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த நிலையில், வாதிகளான நாங்கள் எந்த காலத்திலும் தாவா சொத்தில் குடியிருந்து கொண்டு வசித்து வந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகளும் அல்லது நானும் குடியிருந்து விவசாயம் செய்து அனுபவித்து வருகிறோம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் இல்லை, ஏற்கனவே தாக்கல் செய்துள்ளோம். சென்னிமலை கவுண்டர் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது, ருக்குமணி பெயரில் உள்ள தண்ணீர் கட்டண ரசீது ஆகியவைகளை தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு நாங்கள் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் இந்த வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்ட ரசீதுகள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீது மற்றும் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் 8–ம் பிரதிவாதி லோகநாதன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். 8–ம் பிரதிவாதி லோகநாதன் தான் கிரையம் பெற்ற நாள் முதல் சொத்தின் சுவாதீனத்தை பெற்று சொத்துக்களை சுற்றி கற்களால் கம்பி வேலி அமைத்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

7. எனது பிரமாண வாக்குமூலத்தில் 10–வது பக்கத்தில் பாரா 17–ல் நான் சொல்லியுள்ளது போல எந்தெந்த தேதியில் 8–ம் பிரதிவாதி லோகநாதனும், அவரது அடியாட்களும் வந்து எங்களை அடித்து பிரச்சனை செய்தார்கள் என்றால் 06.10.2024, 08.10.2024, 09.10.2024, 14.10.2024 ஆகிய தேதிகளில் வந்து எங்களை அடித்து பிரச்சனை செய்தார். அவர்கள் அடித்ததால் எங்களுக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லி மருத்துவமனையில்

யாரேனும் சிகிச்சை எடுத்து கொண்டோமா? என்றால் எனது மனைவி தாமரைக்கனி சிகிச்சை எடுத்துக்கொண்டார். அந்த சம்பவம் சம்பந்தமாக போலீசார் குற்ற வழக்கு ஏதேனும் பதிவு செய்தார்களா? என்றால் இல்லை. அவ்வாறு எனது மனைவிக்கு காயம் ஏற்பட்டு சிகிச்சை எடுத்து கொண்டார் என்ற விபரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் தான் பெண்களை அழைத்து சென்று 8–ம் பிரதிவாதி லோகநாதனின் வேலையாட்களிடம் வேண்டுமென்றே பிரச்சனை செய்து அத்துமீறி நுழைந்து கலாட்டா செய்தோம் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் ஒரு பிரச்சனை நடந்ததாகவும், அதை நான் எனது செல்போனில் வீடியோ எடுத்தாகவும் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் எனது செல்போனில் இருந்த வீடியோவை 27.02.2025–ம் தேதியில் தான் சிடியில் பதிவிறக்கம் செய்து அதை எனது தாயார் மூலம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நாங்களே இந்த வழக்கிற்கு ஆதாரத்தை கொடுக்க வேண்டும் என்பதற்காக வேண்டி பிரச்சனை செய்வது போல ஜோடித்து அதை வீடியோ எடுத்து எனது தாயார் மூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வீடியோவில் உள்ள நபர்கள் 8–ம் பிரதிவாதி லோகநாதனுக்கு சம்பந்தப்பட்ட நபர்கள் கிடையாது என்றும், எனக்கு தெரிந்த அரசியல் பிரமுகர்களை வைத்து ஜோடித்து இந்த வீடியோவை தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு 8–ம் பிரதிவாதி தான் சட்டப்படியான உரிமையாளர் என்றால் சரிதான். அதனால், வழக்கு சொத்திற்கும், வாதிகளான எங்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண

வாக்குமூலத்தில் பக்கம் 10–ல் பாரா எண்.17–ல் 8–ம் பிரதிவாதி லோகநாதன் அதிக வசதியானவர் என்றும், அதிக லட்சக்கணக்கில் பணம் செய்கிறார் என்றும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால், 8–ம் பிரதிவாதியிடமிருந்து குறுக்கு வழியில் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த பொய் வழக்குகளை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால், எனது தாயார் தாக்கல் செய்துள்ள இந்த வழக்குகள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.01 14:54:40 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**